ஓம் சரவண பவ

## ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி அறிவுரை நூல்

**22.09.2024**

1. அருள் வடிவாக நின்று உலகமக்களுக்கு
அற்புதத்தை நிகழ்த்துகின்ற
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
பொருள்பட அரங்கமகா ஞானியர் யானும்

2. புகலுவேன் குரோதி ஆண்டு நங்கை திங்கள்
அரங்கன் என் தவசித்தி விழா நன்னாளில்
நாளதனில் ஓங்காரக்குடிலின் நிகழ்வு குறித்தும்
உயர்வான பெருவிழாவின் மகிமை குறித்தும்

3. வகைபட தொண்டர்களின் சேவை குறித்தும்
வல்லமைபட குடிலில் நடந்துள்ள அதிசயம் குறித்தும்
இதனொடு உலகளாவிய வண்ணம்
வல்லமைபட மலேசியா சிங்கப்பூர் தேசங்கள் சார்ந்து

4. வந்துள்ள அன்பர்கள் தொடர்புகள் குறித்தும்
உலக மக்களின் சேமம் குறித்தும் இனிதே
அரங்கன் யான் இதுகாலம் அருளாசியாக அருளுவேன்
அருளவே அரங்கன் யான் சூட்சும ஜோதி வடிவம் பெற்ற

5. முதல் தவசித்தி விழா இது
இந்த விழாவில் அரங்கன் என்னை
தேடி வந்த மக்களுக்கு
ஜோதி சொரூபமாய் அரங்கன் யான் தீட்சையும்

6. உயர்வான சூட்சும சக்தியும் தந்துள்ளேன்
உள்ளபடி அவரவர்க்கு உயர்வு தரும் வண்ணம்
உணவில் கலந்து அரங்கன் யான் சுவை கூட்டி
அன்பர்களை சுவையாக தழுவியுள்ளேன்

7. உள்ளபடி வந்துள்ள மக்களெல்லாம்
உயர்வாக அரங்கன் என் பிறவித் தொடர்புள்ள
உயர்மக்களாகும் ஆகவே அவர்களுக்கும்
ஆற்றல்பட குடிலில் தொண்டாற்றுகின்ற

8. தொண்டர் பெருமக்கட்கும்
நிர்வாகிகட்கும் வல்லமை கொண்டு
மலேசியா புவியில் இருந்து வந்துள்ள
என் தொண்டர் பெருமக்கட்கும்

9. அரங்கன் யான் பரிபூரண
ஆசி இதுநாளில் தந்துள்ளேன்
உள்ளபடி இந்த நன்னாளில்
உயர்வாக அவரவர்க்கும்

10. அவர்களே அறியாத வண்ணம்
சூட்சும தீட்சை யாவர்க்கும்
பூஜை கலந்தவர்க்கும் தந்துள்ளேன்
உள்ளபடி மலேசியா புவியிலிருந்து

11. உயர்வாக என் சேவையை
சக்திமிகு தேசமெங்கும் கொண்டுசெல்ல
சரணாகதி கொண்டு இயங்குகின்ற
மகிழ்ச்சி நாம அடியவன்

12. ஆனந்தன் எனும் மாந்தன் வழி
அற்புதம்பட சில சூட்சுமம் நடத்த உள்ளேன்
உள்ளதால்தான் இந்த தவசித்தி
விழாவில் உயர்வுபட அவனை

13. கலந்து கொள்ள யானே
வரவழைத்து இந்த நன்னாளில்
சூட்சும ஆசியும் தீட்சை ஸ்பரிசமும்
உணவு வழியான மகாசக்தியும் தந்துள்ளேன்

14. உள்ளபடி அவனோடு கலந்து கொண்ட
உயர் சீடர் பெருமக்கள் அனைவருக்கும்
பரிபூரணமான பாதுகாப்பு ஆசியும் உண்டு உண்டு
சிந்தைபட என் வழி தொடர்பு கொண்டுள்ள

15. மகா சக்திமிகு அன்பர்கள்
அத்துணைபேரையும் இந்த நன்னாளில்
பரிபூரணமாய் அரங்கன் ஆசி தந்து
ஆற்றலும் கூட்டியுள்ளேன்

16. உள்ளபடி ஓங்காரக்குடிலின் விழா
உயர்வாக மகா சக்திகளெல்லாம் சேர்ந்து
ஆசீர்வதிக்க பரிபூரணமாய்
விழா சிறப்பாக நடத்தியுள்ளேன்

17. உள்ளபடி இந்த நன்னாளில்
ஓங்காரன் எந்தனுக்கு உண்டான
பெருவிழா என்பதாலே
சிந்தைபட ஆறுமுகனாரும்

18. செப்பிட மும்மூர்த்தியர்களும்
மகா சக்திகளும் எல்லை காக்கும்
மகா சக்திகளும் கூட வந்து கலந்து
இந்த விழாவில் எல்லா

19. பாதுகாப்பும் தந்து அருள் புரிந்துள்ளனர்
உள்ளபடி ஓங்காரக்குடிலின் புகழும்
ஓங்காரக்குடிலிலிருந்து கிளம்புகின்ற
மகா சக்தியும் வெளிப்பாடும்

20. உலகமென்னும் எல்லா தேசங்களிலும்
அறியப்படும் உணர்த்தப்படும்
அரங்கன் என் நாமஜெபம்
போற்றுகின்ற எல்லைக்கு

21. தனிப் பாதுகாப்பும் தனித்துவமான வளர்ச்சியும்
ஞானஆட்சிக்குண்டான மாற்றங்களும்
ஆங்காங்கே நிகழக் கூடும்
அற்புதமாய் சைவநெறியாம் உயர்நெறி

22. சகலரும் ஏற்கின்ற வண்ணம் உலகத்தில்
மாற்றத்தை அரங்கன் யான் கொண்டு வருவேன்
அதற்குகந்த அதற்கு ஒத்திகையான
பெருவிழாதான் இந்த தவசித்தி விழா

23. இந்த விழா காலம்தொட்டு
உலகமெங்கும் ஒரு மாற்றத்தை அரங்கன்
உயர்வாக என் அன்பர்களை கொண்டே
நடத்துவேன் சக்திமிகு இந்த விழாவில்

24. ஓங்காரக்குடிலுக்கும் பலம் கூட்டியுள்ளேன்
ஓங்காரக்குடிலின் தர்மத்திலும்
மகா சக்தி இணைத்துள்ளேன்
நிர்வாகிகட்கும் தயவோடு நடக்கின்ற

25. மகா சக்தியும் கருணையும்
இன்று அவரவர்க்கும் வரமாக
சூட்சும சக்தி சூட்சும ஸ்பரிசமாக
அரங்கன் யான் அருளியுள்ளேன்

26. உள்ளபடி நிர்வாகத்திற்கு தேவையான
புதிய யுக்தி முறைகளும்
இதற்கு தேவையான பொருளாதார
பலங்களும் அளவிலா வண்ணம்

27. பெருகும் வண்ணம் அரங்கன் யான்
ஆசி தந்துள்ளேன் உள்ளபடி
தொண்டர்களுக்கும் உள் வெளி பணியென
வசூல் சேவையாற்றுகின்ற அன்பர் பெருமக்கட்கும்

28. பயண பாதுகாப்போடு
சென்ற இடமெல்லாம்
சர்வ வரவேற்பும் பாதுகாப்பும்
அனுகூலமும் சித்தியாக அரங்கன்

29. இன்று அவரவர்க்கும் வரமும்
ஆசியும் தந்துள்ளேன்
உள்ளபடி இனி வருகின்ற காலம்
தர்மப்பணிக்கு எந்த தடையும்

30. இல்லாத வண்ணம் கேட்கின்ற
இடமெல்லாம் பொருளாதார பலம்
உதவி கிட்டும் வண்ணம்
பேரருள் புரிந்துள்ளேன்

31. உள்ளபடி ஒவ்வொரு கிளைசங்கங்களும்
ஓங்காரன் என் ஆசியோடு
உயர்வாகவும் பெருமளவிலே விரிவடைந்து
பொருளாதார வகையில் குறைவோ

32. பின்னடைவோ தேக்கமோ காணாத வண்ணம்
பெரு லாபமோடும் புண்ணிய பலம் கூடிட
அவரவர்க்கும் ஆரோக்கியம்
ஆற்றல்பட இயங்கிட அரங்கன்

33. அருள் பலம்மிக்க வரம் இன்று தந்துள்ளேன்
உள்ளபடி அரங்கன் என்
தொண்டரென உலகத்தில்
அடையாளம் கொண்ட மக்களெல்லாம்

34. சிந்தைபட இந்தவித நன்னாள் முதல்
செப்பிடுவேன் அவர்கட்கு
இனி பிறவாத பெரும்பேற்றுக்கு உண்டான
சித்திமிகு வரத்தையும் இன்று

35. ஆசியாக அரங்கன் தந்துள்ளேன்
உள்ளபடி என் நாமஜெபத்தோடு
ஒருவர்க்கேனும் உணவிட்டு
உயிர்க்கொலை நீக்கி வாழ்ந்தால் போதும்

36. அதுதான் தவவாழ்வு
அவர்கட்கெல்லாம் தவசித்தி
உறுதியாகும் என்ற வரத்தை இன்று
என் தடம் வந்து வேண்டிக்கொண்ட

37. அனைவருக்கும் அரங்கன் யான்
வரமாக இன்று தீட்சையாக
அனுகூலம் தந்துள்ளேன்
உள்ளபடி இன்று வந்தவர்கள்

38. அத்துணை பேருமே உலகத்தில்
ஞானியாகின்ற வாய்ப்பும்
ஆசியும் அவர்கட்கு பரிபூரணமாய்
உண்டு உண்டு அரங்கன் என்

39. அனுமதி ஆசியோடே உலகமெல்லாம்
இவர்கள் சுற்றித் திரிந்து
சென்ற இடங்களிளெல்லாம்
என் நாமத்தை சொன்னால் போதும்

40. அந்த எல்லையும் ஆற்றல் பெருகும்
அன்னதான தர்மசேவை நோக்கமுள்ள
மகிமை கூடி அந்த தேசங்களும்
பாதுகாப்புமிக்க தேசமாக மாறும்

41. இந்த அற்புதத்தை அரங்கன் யான்
உலகமெங்கும் நடத்தவே
சன்மார்க்க சங்கம் என்கின்ற
உயர் சக்தி நிலையை உருவாக்கி

42. உயர் தொண்டர் பெருமக்களை
இணைத்து உலகளாவிய வண்ணம்
சேவையாற்றுகின்றேன் ஆகவே வருங்காலம்
அரங்கன் சக்திமிகு ஞானலோகமாகவும்

43. அகத்தீசன் ஆறுமுகன் ஆற்றல்பட
சக்தியோடு கலந்து அருளுகின்ற
புண்ணிய தர்மபலம் மிக்க
ஞான உலகமாக மாற்றம் பெறும்

44. என அரங்கன் யான் அருளி
இந்த நன்னாளில் ஓங்காரக்குடிலுக்கு
இன்னும் சக்தி கூட்டியுள்ளேன்
இந்த குடில் தொடர்பில்

45. தொண்டாற்றுகின்ற பொருளுதவி செய்கின்ற
அரங்கன் என் நாமஜெபத்தை
ஓங்காரக்குடிலை எங்கு எவர் சொல்லி
நல்ல விஷயமாக பகிர்ந்து கொள்கின்றார்களோ

46. அவர்கட்கெல்லாம் அதீத வரமும்
ஆரோக்கிய பலமும் ஆயுள் கீர்த்தியும்
அன்னவர்கள் வம்சமே தழைக்க
இன்று அரங்கன் வரம் தந்துள்ளேன்

47. உள்ளபடி இந்த நன்னாளில்
உலகிற்கே ஒரு மாற்றம்
அரங்கன் என் ஆசியுடன் நடந்தேறும்
அரங்கமகான் யான் அருளிய அருளாசி
விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–